சங்க உறுப்பினர்களுக்கு மட்டும்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# செய்தி மடல்

வெளியீடு : 019 மாதம் : வைகாசி ஆண்டு : 2011

கொழும்புத் தமிழ்ச் சங்க இணையத்தளத்தில் "எம்மைப் பற்றி" என்னும் பகுதியிலுள்ள "செய்தி மடல்" என்பதன் பிரசுர வடிவம் இம்மடலாகும். மேலும் விபரங்களுக்கு எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

இணையத்தளம்:www.colombotamilsangam.com
மின்னஞ்சல்: tamilsangamcolombo@yahoo.com
info@colombotamilsangam.com
தொலைபேசி இல : 2363759
தொலைநகல் : 2361381

## நடைபெறவிருக்கும் நிகழ்வுகள்

### திருக்குறள் மாநாடு

**22, 23, 24.07.2011**

- திருக்குறள் ஏட்டுச் சுவடி ஊர்வலம்
- 'முப்பால்' மாநாட்டு மலர் வெளியீடு
- நாவன்மைப் போட்டியில் தெரிவான நல்ல பல பேச்சுக்கள்
- உள்ளூர், வெளியூர் அறிஞர்கள், கலைஞர்கள் கலந்துகொள்ளும் சொற்பெருக்கு, ஆய்வரங்கு, பட்டிமன்றம் மற்றும் கலைநிகழ்வுகள்

*மேல் மாடி நூலகம், படிப்பகம் மற்றும் அறைகளுக்குச் சென்றுவர மின்தூக்கி அமைக்கும் பணி ஆரம்பித்தல்*

**24.06.2011** அன்று
தமிழ்ச் சங்க பிரதான நுழைவாயிலில் "அலங்கார வளைவு" அமைக்க அடிக்கல் நடுதல்

| மு.கதிர்காமநாதன் | ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் | செ.திருச்செல்வன் |
|---|---|---|
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |

## வைகாசி மாதம் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் பற்றிய மீள்பார்வை

### அறிவோர்ஒன்று கூடல் - 457

04.05.2011 இன்றைய நிகழ்வுக்குப் பரிசில் நிதியக் குழுச் செயலாளர் திரு.ஆ.குகமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கி, பேச்சாளராகச் சட்டத்தரணி திரு.எஸ்.பி.சிவஞானம் அவர்கள் **"நாளைய உலகமும் சுற்றாடலும்"** என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். "எஸ்.பி.சிவஞானம் அவர்கள் யாழ்.ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத் தலைவராக விளங்கினார். சமூகத் தொண்டாற்றிய பெருமகன். இந்திய ராணுவ நடவடிக்கைக் காலத்தில் எமது மக்களுக்கு பாரபட்சமற்ற முறையில் மொழி பெயர்ப்புச் சேவை செய்தவர். எமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர். "மாப்பிள்ளை சிவஞானம்" என்ற அடைமொழி மூலம் அழைக்கப்படும் ஒருவர்" என பேச்சாளரை அறிமுகம் செய்து வைத்தார் தலைவர். "கணனி மூலம் சகல துறைகளிலும் தகவல்களை உடனடியாக அறிய முடிகிறது. அத்துடன் சேர்த்து ஆபத்தும் காணப்படுகின்றது. நமது எதிர்கால வாழ்வினை பாதுகாப்பது எமது கடமை. சூழல் மாசடையும் போது நாம் அதைக் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும். எமது பேச்சாளர் அதைப் பற்றி விரிவாக உரையாற்றுவார்" என்று கூறினார்.

திரு.எஸ்.பி.சிவஞானம் தமது உரையில் "சுற்றாடல் மாசுபடுதல் பற்றிய தலைப்பினை எடுத்து இலங்கை மாசுபடுதலினை கட்டுப்படுத்துவதில் வெற்றியடைந்தது" எனக் கூறினார். உதாரணமாக "பசல்ஸ் லேன்" துர்நாற்றம் பற்றிக் கூறினார். அதிகாரிகள் தீவிரமாக செயல்படுகிறார்கள் "டெங்கு ஒழிப்பு வாரம்", "சுற்றாடல் தினம்" போன்றவை கொண்டாடப்படுகின்றன.

மீறியவர்களுக்கத் தண்டம் விதிக்கும் முறையும் உண்டு. உலகம் வெப்பமடையும் போது கதிர்கள் ஓசோன் படலத்தில் துவாரங்களை ஏற்படுத்தி பாதிப்புகளை உண்டு பண்ணுகின்றன. ஊதா நிறக் கதிர்களின் பாதிப்பு தீவிரமாகவிருக்கும் துருவத்தில் உள்ள பனிகட்டியானது 50 வருடங்களில் 3/4 பங்கு உருகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாலைதீவு போன்ற கடல் மட்டதீவுகள் பாதிக்கப்படும். எமது நாட்டின் கரையோரங்களும் பாதிப்படைய இடமுண்டு. தொழில் வளாங்களின் கழிவு, வாகனங்களின் தூசி, நச்சு வாயு பரவுதல் போன்றவற்றுடன் செல்போன் பாவனைகள் அதிகரிப்பும் சுற்றாடலை மாசுபடுத்துகின்றன. எமது முன்னோர் மரம் நடுதலின் மூலம் சுற்றாடலைக் காப்பாற்றினர்.



மரங்களை தறித்தல் மூலம் யாழ்ப்பாணத்தில் மழை வீழ்ச்சி குறைவடைகிறது. சுண்ணக்கற்கள் அகழ்வினால் தரைக் கீழ் நீர்மட்டம் குறைவடைகிறது. கடல் நீர் உட்புகுந்து விடுகிறது. அம்பாந்தோட்டையில் துறைமுக அமைவிடம் சிறந்தது அல்ல என்றார். யாழ்ப்பாணத்தில் ஒருவர் 3 பனங்கன்றுகளை நட்டால் 650000X3=1950000 மரங்கள் இன்னும் 20 வருடங்களில் வளர்ச்சியடையும். எமது வருங்கால சந்ததியினர் பயனடைவர். இராணுவ நடவடிக்கையில் 10 இலட்சம் பனை மரங்கள் வெட்டப்பட்டன. இப்பொழுதும் வெட்டுகிறார்கள். முன்பு கைகளினால் நீர்ப்பாசனம் செய்தனர். பலவித தொழில் நுட்ப வளர்ச்சியினால் இயந்திரங்கள் இயங்கியும் நாம் பின்தங்கியிருக்கிறோம். நாம் வீணாக்கும் நீரை மத்திய கிழக்கிற்கு ஏற்றுமதி செய்தால் எவ்வளவு எண்ணெய் பெறலாம். என்ன வளம் இல்லை. இத்திரு நாட்டில்? எமது வளமான மண்ணை நாம் புறக் கணிக்க வேண்டுமா? அமெரிக்க நாட்டில் பூர்வீக செவ்விந்தியர்களின் நிலங்கள் அபகரிப்பு ஏற்பட்ட விதத்தையும் விளக்கினார். தென்னிந்திய அணுசக்தி உலைகளினால் நமக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. பொதுச் செயலாளர் பேச்சாளருக்கு பரிசளித்து கௌரவித்தார். நிகழ்வு இனிது நிறைவெய்தியது.

### நிறுவுனர் நாள் விழா

06.05.2011 கொழும்புத் தமிழ்ச் சங்க நிறுவன நாள் விழா சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மாலை 5.00மணியளவில் ஆரம்பமானது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் அவர்கள் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். அவர் தனதுரையில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆரம்ப காலந்தொடக்கம் இன்றுவரை ஆற்றி வரும் சேவைகளைச் சுருக்கமாக எடுத்துக்கூறியதோடு இனி வரும் நாட்களில் செய்யவிருக்கும் பணிகள் பற்றியும் கூறினார்.

இலக்கியக் குழுச் செயலாளர் திரு.எஸ்.எழில்வேந்தன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

அவரது உரையைத் தொடர்ந்து சிவில் மேல் முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதி கௌரவ சொ.தியாகேந்திரன் அவர்கள் பிரதம விருந்தினர் உரையை ஆற்றினார். தென்மதுரை, கபாடபுரம் போன்றபகுதிகளின் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தமிழ் மன்னர்களது ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். ஒழுக்கமுள்ள சமுதாயமாகக் காணப்பட்டது.

திருக்குறள், திருகுர்ஆன் போன்ற நூல்களைக் கற்றதால் மக்கள் ஒழுக்க சீலர்களாக வாழ்ந்தனர். இன்றைய தலைமுறையினர் இப்படியான நூல்களைக் கற்பதில்லை. திருக்குறள், சங்கநூல்கள், கம்பரா

மாயணம், மகாபாரதம் போன்ற நூல்களைப் படிக்க வேண்டும். வீரம், தந்தை - மகன் உறவு சகோதர உறவு, மனித விழுமியங்கள், மனித தர்மம் என்பன பற்றி அறிந்து கொள்ளலாம். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர். அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்; ஊழ்வினை வந்துறுத்தும் போன்ற செய்திகளைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

மருத்துவம், சமயம், வான சாஸ்திரம் பற்றி அக்கால நூல்களில் கூறப்பட்டுள்ளன. கரிகாலன் கட்டிய கல்லணை பொறியியல் முறைப்படி





கட்டப்பட்டுள்ளது. தஞ்சைக் கோவிலும் அவ்வாறே. மருத்துவ மனைகள் அமைக்கப்பட்டிருந்தன. சவைத்திரம் என்பது உடலைக் கிழிப்பது. இதிலிருந்தே சத்திர சிகிச்சை என்ற சொல் உருவாகி யிருக்கலாம். 2000ம் ஆண்டு களுக்கு முன்னரே கோள் பற்றி ஞானசம்பந்தர் பாடியுள்ளார். பல துறைகளிலும் வளர்ந்திருந்தது எமது சமுதாயம். அந்நிய படையெடுப்பால் சிதைந்தது. பிள்ளை களுக்கு ஏமாற்றுக் கதைகளைக் கூறினர். கோபம் அதிகம் வருகிறது. பொது நலக்கல்வி பெறுவதில் பெற்றோருடன் ஆசிரியர் பங்கு முக்கி யத்துவம் வகிக்கின்றது. மொழி பெயர்ப்புக்களில் கடுமையான சொற் பிரயோகம் கூடாது. பிற மொழிச் சொற்களை உள்வாங்கி



எமது மொழியை வளர்க்க வேண்டும் என்று ஒரு நல்ல உரையை ஆற்றி அமர்ந்தார்.

அடுத்து சிறப்புரை ஆற்றிய வந்த பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் விமர்சனச் சிந்தனை பற்றிப் பேசலாம் என தனதுரையை ஆரம்பித்தார். இது ஒரு சிக்கலானதும் ஆபத்தானதும் கூட. கிரேக்க அறிஞர் சோக்கிரட்டீஸ் எதையும் எப்படி? எதற்காக? என்று கேள் என்றார். இதனால் அவர் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார். பழமையான சிந்தனை. இன்றைய கல்வித் திட்டத்தில் விமர்சனச் சிந்தனை உலக மயமாக்கப்படவேண்டும். இன்று பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வியாக உள்ளது. பள்ளி





தொடக்கம் பல்கலைக்கழகம் வரை விசாரணை மூலம் அறிவைத் தேட வேண்டும். இதற்கு சில தடைகளும் இருப்பது போலுள்ளது. தொல் காப்பியம் ஒரு முக்கியமான இலக்கணநூல். இந்நூலைப் பலர் எழுதி யதாக ஒரு கருத்துண்டு. 'நும்' என்பது 'நீர்' என வந்தது என்பர். ஆனால் நும் என்பது 'நீம்' எனத் தான் வந்திருக்க வேண்டும். இவ்வாறு பல உதாரணங்களைக் காட்டிப் பேசினார். செந்தமிழ் நாடென்னும்

போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே. பாரதியாரது இப்பாடல் சரியா? இங்கே உணர்வைப் பாடுகிறார் பாரதியார். பாரதியார் ஒரு விமர்சனச் சிந்தனைவாதி, இக்கூற்றுசரியா? தெ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளை, வையாபுரிப்பிள்ளை ஆகியோர் விமர்சனம் செய்தனர். இவ்வாறு கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

மனித நேய மாமணி வி.கயிலாசப்பிள்ளை, முதுபெரும் எழுத்தாளர் செ.கணேசலிங்கன், "சமூகஜோதி" ச.இலகுப்பிள்ளை ஆகியோருக்கு இவ்வருட 'சங்கச் சான்றோர் விருது' வழங்கி கௌரவித்தார்கள். திரு.செ.கணேசலிங்கன் சமூகமளிக்காத படியால் அவரின் மகன் திரு.க.குமரன் அதனைப் பெற்றுக் கொண்டார். திருமதி கவிதா கோகிலகுமாரின் மாணவிகள் வழங்கும் சிறப்பு கலை நிகழ்வாக காவடி, கிராமிய நடனங்களும் நடைபெற்றன. இறுதியாக பொதுச் செயலாளரின் நன்றியுரையுடன் இனிதே நிகழ்வு சிறப்பாக நிறை வெய்தியது.

## நூலகம் (சிறுவர் பகுதி)

07.05.2011 **"கதை கதையாம் காரணமாம்"** என்ற நிகழ்வில் திருமதி வித்யா மதிதரன் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதை களைக் கூறி மகிழ்வித்தார்.

## அறிவோர்ஒன்று கூடல் - 458

11.05.2011 இன்றைய அறிவோர் ஒன்று கூடல் நிகழ்வில் ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.கதிரவேலு மகாதேவா அவர்கள் தலைமையில் திரு.யோகராசா ஜயகாந்த் (பொருளியலாளர், இலங்கை மத்திய வங்கி - பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்) அவர்கள் **"இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை" (2010இல் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளா தாரத்தின் நிலை)** என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

தலைவர் உரையாற்றும் போது இன்றைய உரை கலை இலக்கிய உரைகளிலிருந்து வேறுபட்டது என்று கூறினார். அத்துடன் மத்திய வங்கி பற்றிய குறிப்புக்களைச் சுருக்கமாகக் கூறினார். மத்திய வங்கி யின் ஆட்சேர்ப்பின் போது ஜயகாந்த் ஒருவர் தான் 2005ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். யாழ் மத்திய கல்லூரியிலிருந்து மூவர் தெரிவு செய்யப்பட்டனர். திரு.ஜயகாந்த் கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பின ராகவும், மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்ற தலைவராகவும், ஒரு பிரிவின் தலைவராகவுமுள்ளார். 6.5% இருந்த வளர்ச்சி 2010ஆம் ஆண்டின் அறிக்கைப் படி 8% வளர்ச்சி கண்டுள்ளது என்கின்றனர்.



வடக்கின் வசந்தம் கிழக்கின் உதயம் ஆகியவற்றின் மூலம் வடக்குக் கிழக்கில் வளர்ச்சி ஏற்பட்டது என்று கூறினார்.

ஜயகாந்த் தனதுரையின் போது மத்திய வங்கி ஆண்டறிக்கை 3 மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. ராஜகிரியவில் விரிவுரை இடம் பெறுவது வழக்கம். இதில் ஓரளவுக்கு கணிசமான அளவு பொதுமக்கள் பங்கு கொண்டனர். இதை இங்கு எடுத்துச் சொல்லும் போது பலரும் நன்மையடைய இன்றைய உரை பயன்படும் என எண்ணுகிறேன் என்றார்.

நியதிச் சட்டத் தேவைப்பாடுகள் நாணயச் சபையின் ஆண்டறிக்கை நிதியமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது மார்ச் 31இற்கு முன் சமர்ப்பிக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கையில் 4 பகுதிகள் காணப்படு கின்றன. 8 அத்தியாயங்கள் உண்டு. உண்மைத்துறை, வேளாண்மை, கைத்தொழில், உட்கட்டமைப்பு, பணவீக்கம், விலை மட்டம், இறைத் துறை, நாணயப் போட்டி, நிதியியல் பங்குச் சந்தை இவை பற்றி தமக்குத் தேவையான பகுதிகளை அறிந்துகொள்ளலாம். மத்திய வங்கியின் திணைக்களங்கள், செயற்பாடுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிர்வாக வழி முறைகள். 3 தசாப்த காலம் நீடித்த மோதல்கள் முடிவடைந்த பின்னரான முதலாவது முழுமையான ஆண்டு. 1) சாதகமான சூழல், பொருத்தமான கொள்கைகள், உயர்ந்த பொருளாதார வளர்ச்சி, அதிகரிப்பு உறுதிப்பாடு, அதிகரித்த சமூக நலன்புரி இவற்றோடு சில சவால்களும் காணப் பட்டன.

எண்ணெய் இயற்கை அனர்த்தம், அரசியல் குழப்ப நிலை, படுகடன் நெருக்கடி, நெருக்கடி காலத்தில் வழங்கப்பட்ட இறைத் தூண்டலை நிறுத்து வதில் காணப்பட்ட தாமதம்.

2010ல் பொருளாதாரம் பின்வரும் துறைகள் வலுவாக மீட்சியடை கின்றன. உண்மைத்துறை, வணிகத்துறை, வேளாண்மைத்துறை, மீன்பிடித்துறை, கைத்தொழில்துறை. அமெரிக்க பொருளாதார வளர்ச்சி யின் தாக்கம் எமது நாட்டையும் பாதித்தது.

2010 நாட்டினுடைய தலைக்குரிய வருமானம் அதிகரித்துள்ளது. வளர்ச்சி பரந்த தளத்தினைக் கொண்டிருந்தது. 2010ல் அனைத்து முக்கிய துறையிலும் அதிகரித்த செயலாற்றல். கைத்தொழில் உள்நாட்டுத் தேவை, ஏற்றுமதிக்கான உற்பத்தி ஓரளவு சாதகமான தன்மை காணப்பட்டது.

சுற்றுலாத்துறை வளர்ச்சி, வங்கித்துறை, காப்புறுதி - கடன் வட்டி வீதம் குறைவடைந்தது. தெரிந்தெடுக்கப்பட்ட சில குறிகாட்டிகள், குறிப்பாக

தொலைபேசி, வலுவுருவாக்கம், மின்சாரம், துறைமுக செயலாக்கம். சேமிப்பு மற்றும் முதலீடுகள் இரண்டும் அதிகரித்தன. தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. தொகை மதிப்புப் புள்ளியிடல் திணைக் களத்தினால் மதிப்பிடப்பட்ட விபரம் மத்திய வங்கி அறிக்கையில் உள் வாங்கப்படுகிறது. உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் முன்னேற்றம் கண்டு வருகிறது.

வெளிநாட்டுத் துறை தோற்றப்பாடு மேம்பட்டிருக்கிறது. 2010ல் ஏற்றுமதி வருமானங்கள் வலுவாக மீட்சியடைந்தன. முன்னுரிமைகளில் பொது வாக்கப்பட்ட முறைமை மீளப் பெறப்பட்டமை தொடர்பாக சவால்களை ஏற்றுமதியாளர் வெற்றிகரமாக சமாளித்தனர். (GSP வரிச்சலுகை இரத்து. 7200 பண்டங்களை அடிப்படையாகக் கொண்டது) இது பெரிதாகப் பாதிக்கப்படவில்லை. இறக்குமதியின் மீதான செலவினமும் அதிகரித்தது. (வாகனப் பதிவு அதிகம்). 2010ல் பன்னாட்டு மசகெண் ணெய் விலை அதிகரித்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் கூர்மை யாக வளர்ச்சி கண்டன.

சுற்றுலாத்துறை மீண்டும் வேகமடைந்தது. மொத்த அலுவல்கள் ஓழுக்குகள் உயர்ந்த சாதனை மட்டத்தினை அடைந்தது.

வெளிநாட்டுச் செலவாணி உட்பாய்ச்சல் ரூபா உயர்வடைய வழி வகுத்தது. இறைத்துறை அரச செலவினம் வரவுசெலவுத் திட்டப் பற்றாக் குறை - குறைவாகக் காணப்படுகிறது. நிதியிடல் அரச படுகடன் வீழ்ச்சி யடைந்துள்ளது. இவ்வாண்டுப் பகுதியில் பணவீக்கம் குறைக்கப்பட்ட அளவில் காணப்பட்டது. வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. தனியார் துறைக்கான பொதுக்கடன் தொடர்ந்து அதிகரித்தது. விரிந்த பணத்தின் வளர்ச்சி நிதியியல் முறைமை மேலும் மேம்பட்டுக் காணப்படுகிறது. பங்குப்பரிவர்த்தனை சீரடைந்துள்ளது. ஆண்டறிக்கையில் 20 சிறப்புக் கட்டுரைகள் காணப்படுகின்றன. இதை மாணவர்கள், ஆய்வாளர்கள் வாசித்துப் பயன்பெறலாம். மின் குறியீட்டு விளக்கப்படங்களையும் பார்வையாளர்களுக்குக் காட்டி பயனுள்ள ஒரு சிறப்பான உரையை ஆற்றி நிறைவு செய்தார்.

**நினைவுக் கருத்தரங்கு**

13.05.2011 கொழும்புத் தமிழ்ச் சங்கததின் அனுசரணையுடன் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுக் குழுவினரால் நடத்தப்பட்ட பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் நினைவுக்கருத்தரங்கு பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள் தலைமையில் மாலை 6.00மணியளவில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் ஆரம்பமாகியது.



கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் அவர்கள் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். நினைவுக் குழுவினரின் சார்பில் அகவிழி ஆசிரியர் திரு.தெ.மதுசூதனன் வரவேற் புரை நிகழ்த்தினார். பேராசிரியரது பிறந்த தினமான மே 8ஆம் திகதியை நினைவு கூர்ந்து இக்கருத்தரங்கு நடைபெறுகிறது. அவர் நினைவாக சில நூல்களைக் கூட வெளியிட்டு வந்துள்ளோம். தமிழ்ப் புலமைப் பாரம் பரியங்களை உள்ளடக்கிய நூலும் வெளிவந்துள்ளது. என்னை ஆளாக்கிய பேராசன் கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழை மொழியமைப்பாக இலக்கியக் கோவையாக ஆக்கினாரென பேராசிரியர் வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களது நினைவு தினமும் இம்மாதம் 12ஆம் திகதியாகும். இது பெரிதாக நினைவு கூரப் படவில்லை. பெரியார் கணபதிப்பிள்ளை அவர்களை நினைத்துப் பார்க்கும் ஒரு நிகழ்வாகவும் இது உள்ளது. தனிநாயகம் அடிகளார், சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் ஆகியோரது நினைவுகளும் மீள்பரிசீலிக்கப்பட வேண்டும் என்று கூறி இவ்விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று அமர்ந்தார்.

நினைவுக்குழு தலைவரும் விழாத் தலைவருமாகிய பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள் தலைமையுரை ஆற்றும் போது இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பல போதனா பீடங்கள் உண்டு. தமிழ்ச் சமூகத் தோடு தொடர்புடையது தமிழ்த் துறையே. தமிழர் பண்பாடு, நாகரிகம், இலக்கியம் அனைத்தையும் உள்ளடக்கிய சகல துறைகளிலும் தமிழ்ப் பேராசிரியர் பணியாற்றியுள்ளார். வித்தியானந்தனவர்களது நினைவு தினம் பல ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருகிறது. தங்கக் கோபுரத்தில் வாழ்ந்தவர்கள் என்பதுதான் பிரித்தானிய பல்கலைக்கழக மரபு.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் தானாக கீழ் இறங்கி வந்து நாட்டுக் கூத்து, நாட்டுப் பாடல்களை நவீன மயப்படுத்தி மேடையேற் றினார். பேராசிரியர் சரச் சந்திர சிங்கள மக்களுக்கு இப்பணிகளைச் செய்து வந்தார். தமிழ் உரைநடை வரலாற்றை பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் எழுதியுள்ளார். பேராசிரியர் கைலாசபதி அவர்கள் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். புறநானூற்றுப் பாடல்கள் கிரேக்க நாட்டுப் பாடல்களுடன் ஒப்பிடப்படுகின்றன. தமிழ்த் துறை சார்ந்தவர் களே அதிகம் விமர்சனத்துக்கு உள்ளாகின்றனர். ஆகவே பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுக்கு நினைவு விழா நடத்துவது மிகவும் பொருத்தமானது எனக் கூறி தலைமையுரையை நிறைவு செய்தார்.

பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் "உற்றறி கோட்பாடு (Critical theory) இலக்கியங்களை விளங்கிக் கொள்வதற்குரிய வழிமுறையாதல்" என்னும் பொருளில் நினைவுப் பேருரை ஆற்றினார். உற்றறி கோட்பாடு என்பது சமூகவியல், அழகியல் துறையிலும் உண்டு. உற்றறி கோட்பாடு கருத்தியல் இசைகள் எவ்வாறு தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்ற மார்க்சிய கோட்பாடாகும். கலை, இலக்கியம் வெறும் பொழுதுபோக்கு என்ற கருத்து மேலைநாடுகளில் இருந்தது. முதலாளித்துவக் கோட்பாடு கலை அமைதியாக ஏற்றுக் கொள்ளச் செய்வதுதான் கலை கலைக்காக என்ற சிந்தனை வாதம். உற்றறி கோட்பாடு முதலில் மொழி பற்றி சிந்திக் கிறது. மொழியியலாளர் இலக்கண வரம்புகள் மீறப்பட்டாலும் சொல்ல வேண்டிய கருத்தை வெளிப்படுத்துவர். உதாரணமாக குழந்தை, இலக்கணம் அறி யாமலேயே பேசத் தொடங்குகிறது. கட்டமைப்பியலில் 1) எல்லோருக்கும் பொதுவான மொழி 2) தனக்கென உரித்தான சுயமான மொழி என இருவகைப்படுகிறது. அடுத்து "எடுத்துரைப்பியல்" இதை நாடக ஆசிரியர்கள் பயன்படுத்துவர். 1) எடுத்தியம்பும் முறை கதை plot. உதாரணம் அரசன் இறந்தான் அதைத் தொடர்ந்து அரசியும் இறந்தாள். 2) அரசன் இறந்தான். அந்த சோகத்தால் அரசியும் இறந்தாள். இலக்கியத்தை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு ஆராய்தல்.

கருத்துநிலை அல்லது கருத்தோவியம் இது வர்க்க சார்பானதாக இருக்கும் என்பர். அடுத்து அகவயமான நோக்கு நனவு மனம் 'நனவிலி மனம்' கதைகள் தான் இலக்கியங்களாக வெளிவருகின்றன என்பர். பேராசிரியர் உரை புத்தக வடிவில் அச்சிட்டு சகலருக்கும் வழங்கப்பட்டது.

கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச்செயலாளர் திரு. ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களின் நன்றியுரையுடன் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களது நினைவுக் கருத்தரங்கு நிறைவு பெற்றது.

**நூலகம் (சிறுவர் பகுதி)**

14.05.2011 "கதை கதையாம் காரணமாம்" என்ற நிகழ்வில் திருமதி அ. புவனேஸ்வரி கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

**அற்றைத்திங்கள் - கலாநிதி செல்வி திருச்சந்திரன்**

17.05.2011 வைகாசித் திங்கள் அற்றைத்திங்கள் நிகழ்வு தலைவர் திரு. மு. கதிர்காமநாதன் தலைமையில் தொடங்கியது. பணிப்பாளர், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி செல்வி திருச்சந்திரன் அவர்கள் இன்றைய நிகழ்வில் பங்கு பற்றிச் சிறப்பித்தார்.



தலைவர் தமது அறிமுகவுரையில் பிட்டுக்கு மண் சுமந்த சிவனின் கதையில் வரும் "செம்மனச் செல்வி" என்ற பெயரினைக் கொண்ட பேச்சாளர் புகழ் பூத்த குடும்பத்திலிருந்து வந்த ஹண்டி பேரின்ப நாயகம் அவர்களின் புதல்வி. மூன்றாவது பிள்ளை இறந்து விடவே நான்காவது புதல்விக்கு தாம் நினைத்த பெயரினை சூட்டி மகிழ்ந்தார். தாயில்லாப் பிள்ளைகளைக் குறைவில்லாமல் வளர்த்து தம்மைப் போன்று முற்போக்கு சூழ்நிலையில் உருவாக்கினார். அன்பு, அரவணைப்பு, பாசம் மூன்றையும் ஒருங்கே கொண்டு தாய்க்குத்தாயாக இயங்கினார். திரு. பேரின்பநாயகம் அவர்கள். திருமதி. செல்வி பல் கலைக்கழகத்தில் பட்டம் பெற்று, பிறநாட்டில் முதுமாணி, கலாநிதிப் பட்டங்களையும் பெற்று, திரு. திருச்சந்திரனை மணந்து ஒரு பிள்ளைக்குத் தாயானவர். பெண்கல்வி, பெண் முன்னேற்றம் என்பவற்றில் கூடிய அக்கறையுடன் "பெண்கல்வி ஆய்வு நிலையத்தில் 25 வருடங் களாக பணிப்பாளராக பணிபுரிந்து வருபவர் என்றார்.

திருமதி செல்வி அவர்கள் தனதுரையில், தந்தையார் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராக பணிபுரிந்த போது முற்போக்குச் சிந்தனை யாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். அவர்களின் உரையாடல் களை நாம் செவிமடுத்தோம். ஆங்கிலக் கல்வியில் நாட்டம் அதிகம் இருந்ததுடன் மார்க்சியம் முதல் பெரியாரின் கொள்கைகளையும் அறிந்து கொண்டேன். தமது வீட்டில் பணிபுரிந்த "பாறி" என்ற பெண், மேல் சட்டை அணியாமல் சேலையைக் குறுக்குக் கட்டாக அணிந்து வந்தார். அவர்களைச் சட்டை அணியவிடாமல் எமது சமூகம் தடை செய்தது. அதை நிவர்த்திக்க நானே ஒரு சட்டையைத் தைப்பித்து கொடுத்தேன். அவள் இறுதி வரை அதை அணியவில்லை. பெண் விடுதலை பேசும் தாய்மார்கள் தம் பெண்பிள்ளைகளின் உடைகளில் கவனம் செலுத்த வேண்டும். நாகரீகம் அவசியம். ஆனால் அதற்கும் ஒரு எல்லை உண்டு. மேலும் செல்வி அவர்கள் தமதுரையில் எனது தந்தையின் நண்பர்களில் ஒருவர் கம்யூனிஸவாதி மற்றவர் சமசமாஜ வாதி; தந்தையார் காந்திய வாதி; அர்த்தமுள்ள விவாதங்களை நான் கேட்டேன். என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்டீசில்வா, திரு. கெனமன் ஆகியோர் யாழ் வந்தால் எனது தந்தையுடன் உரையாடிச் செல்வர். நான் பட்டம் பெற்று பல்கலைக்கழத்தில் தொழில் புரிய விரும்பவில்லை.

குமாரி ஜெயவர்த்தன என்ற முற்போக்கு கல்வியாளருடன் சேர்ந்து பெண் கல்வி ஆய்வு நிலையத்தை நிறுவினேன். எனக்குக் கிடைத்த வெளிநாட்டு வாய்ப்பினை உதறித்தள்ளி எமது நாட்டு பெண்களுக்கு பணியாற்ற விழைந்தேன். சில காலம் கிழக்கு பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தேன்.

எனது கடமைகளை எனது கணவர் வரவேற்று ஒத்தாசை புரிந்தார். எவ்வளவு சீர்திருத்த கருத்துகளினை விதைத்த போதும் எமது யாழ் சமூகம், முழுமையாக திருந்தவில்லை என்பது மனதுக்கு கஷ்டமானது. தாழ்குல மக்களை வீட்டில் அழைத்து தேநீர் வழங்கியதற்காக சில உறவினர்களும் நண்பர்களும் எமது வீட்டிற்கு வருவதை தவிர்த்தனர். வாழ்க்கை அழகானது. தடைகளை அகற்றி யாவரும் இன்புற உழைப்போம்" என்றார். சங்கத் தலைவர் தமது பின்னைய குறிப்பில் "குறுக்குக் கட்டு" எமது நாகரீமணிகளின் நவநாகரிக உடையாக இன்று மாறியதை சுட்டிக் காட்டினார். நிகழ்வு இனிது நிறைவு எய்தியது.

## இலக்கியக்களம் 60

20.05.2011 இன்றைய இலக்கியக்களம் நிகழ்வில் சட்டக்குழுச் செயலாளர் திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் லுணுகல ஸ்ரீ "மரபும் புதிதும்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

தலைவர் தனது தலைமையுரையில், "இவர் ஒரு இளங்கவிஞர். தனது தொழிலுக்குத் தொடர்பில்லாத துறையில் ஈடுபட்டுள்ளார். இவர் ஒரு மரபு சார்ந்த இளங்கவிஞர். பரிசுகள் பெற்றவர். இன்பம் துன்பம், இரவும் பகலும் போல் மரபும் புதிதும் பிரிக்க முடியாததாகும். காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப மரபு மாறுகிறது. மாறுவது புதுமை என்று சொல்லலாம். "பழையன கழிதலும் புதியன புகுதலும்" காலத்துக்குப் பொருந்துவது. அகத்தியர் வழியில் தொல்காப்பியர் நூல் எழுத அதை அகத்தியர் குழப்ப முயன்றுள்ளார். தொல்காப்பியம் அரங்கேறியது. பழைய இலக்கண மரபு தவிர்ந்த ஏனையவை புதுக் கவிதை எனப்பட்டது. உள்ளடக்கம் ஒன்றே. சென்னையில் நடந்த ஒரு விழாவில் இவருக்கு கவிதாயினி என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இது பற்றி கவிஞர் லுணுகல என்ன சொல்கிறார் எனக் கேட்போம்" என்றார்.

பேச்சாளர் தனதுரையின் போது இன்றைய நிகழ்வு திடீரென ஒழுங்கு செய்யப்பட்டது. எளிமை என்ற பெயரில் மலினப்படுத்தப்பட்ட கவிதையும் வருகிறது. கவிதை என்பது காதல் போன்றது என்பது என் அபிப்பிராயம். காதல் போல் கவிதையும் அழகானது; அர்த்தமுள்ளது; அலங்கோலமில்லாதது. இன்றைய கவிதையில் எத்தனை கவிதைகள் இதற்குள் அடங்குகின்றன. மரபுக் கவிதையில் மரபு மட்டும் இருக்கும் கருத்து இருப்பதில்லை. புதுக்கவிதையில் ஓசையிராது. காலத்தால் நிலைக்கவேண்டும் என்று எண்ணுபவர் எத்தனை பேர். கவிதை யாப்பு அமைப்பு ஒரு கட்டமைப்புள்ளது. கவிதை கவிதையாக இருப்பது எப்போது? புவியினுக் கணியாய் ஆழ்ந்த பொருள் தந்து.



சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி மரபு ஓசையோடு இருக்க வேண்டும்.

"வாழும் கவிதை வடிவத்தில் இல்லையடா" என்கிறார் கவியரசு வைரமுத்து. இதை வெண்பாவில் பாடினார் அவர்.

"முத்தைத் தருபத்தித்திரு" என்ற திருப்புகழ் அழகிய ஓசையில் பாடப் பட்டது என்றார். பத்து வரிகளில் கவிதை இருக்கலாம். ஒரு சொல்லில் இருக்கலாம். ஒரு எழுத்தில் ஒரு குறியீட்டில் கூட கவிதை இருக்கலாம்.

"நிறைந்து வழியும் பேருந்தில் உள்ளே ஒரு கிழவன் - சிறுமி, குடுத்தது உனக்கென்றால் கோபிக்கமாட்டாளா என மனைவி...."

நன்னூல் கூறியது போல் எல்லாம் அடங்கிய அனைத்தும் கவிதை யில்லை. மரபிலிருந்து உடைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மரபாகட்டும்; புதிதாகட்டும்; ஈற்றில் கவிதையாக இருக்கவேண்டும். இவரது வளர்ச்சியில் ஞானம் சஞ்சிகை ஆசிரியர் அதிக ஈடுபாடு கொண்டவர்.

வாலியின் வாழ்க்கையை மாற்றியது கண்ணதாசன் கவிதை.

வாழ்க்கையென்றால் ஆயிரமிருக்கும்
வாசல்தோறும் வேதனையிருக்கும்

காதலோடு உணர்வும் சேர்ந்திருக்க வேண்டும் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

## நூலகம் (சிறுவர் பகுதி)

21.05.2011 **"கதை கதையாம் காரணமாம்"** என்ற நிகழ்வில் செல்வி பாமினி சுவாமிநாதன் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

## அறிவோர்ஒன்று கூடல் - 459

25.05.2011 அறிவோர்ஒன்று கூடல் நிகழ்வில் **"வாக்குரிமையையும் - பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்கவேண்டும்"** என்னும் பொருளில் இளைப்பாறிய பிரதி அதிபர் சிவா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உரை நிகழ்த்தினார். பரிசில் நிதியச் செயலாளர் திரு.ஆ.குகமூர்த்தி அவர்கள் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். தலைவர் தமதுரையில் இன்றைய பேச்சாளர் தமிழ்ச் சங்கத்திற்குப் புதியவரல்ல என்றும் கூட்டங்கள், கருத்தரங்குகளில் பங்குபற்றியவர் என்றும் ஆசிரியர் சேவையில் சிறந்த பணியாற்றி முத்திரை பதித்தவர் என்றும் குறிப்பிட்டு பேச்சாளரைப் பேச அழைத்தார்.

"ஜனநாயக ஆட்சி என்பது மக்களுக்கான, மக்களினது, மக்களால் ஆன ஆட்சி என்று ஐக்கிய அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதி

ஆபிரகாம் லிங்கன் அவர்கள் கூறியுள்ளார்கள். மக்களாட்சியான ஜனநாயக ஆட்சி சிறப்படைய மக்களின் பங்களிப்பு மிகவும் அவசியம். இவ்வாறான மக்கள் ஆட்சியை உருவாக்க மக்களுக்கு கொடுக்கப்பட்ட அரசியல் உரிமைதான் "வாக்குரிமை" ஆகும்.

உலக மக்கள் வாக்குரிமையைப் பல போராட்டங்களையும், புரட்சிகளையும் செய்த தியாகத்தினால் பெற்றுள்ளனர். இவ்வாறு பெற்ற வாக்குரிமை என்ற அஸ்திரத்தை பாதுகாப்பதும், சரியான நீதியான முறையில் பயன்படுத்துவதும் வாக்காளர்களாகிய எமது உயரிய கடமையாகும். இவ்வாறான உணர்வு எம்மத்தியில் ஏற்பட எம்மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

மக்களாட்சி என்று சொல்லப்படுகின்ற அமைப்பில் வாக்குரிமை முக்கியத்துவம் பெறுகின்றது. தாம் விரும்பும் ஒருவருக்கோ அல்லது கட்சிக்கோ வாக்களிப்பதன் மூலம் தமது விருப்பைத் தெரிவிக்கும் உரிமையை வாக்காளன் பெற்றுக் கொள்கின்றான்.

"சமூகத்தில் அமைதியும் ஒழுங்கும் தேவை என மக்கள் உணர்ந்து அதற்காக ஒரு அமைப்பை உருவாக்கி அதற்குக் கீழ்ப்படிந்து வாழத் தூண்டுகின்ற எண்ணமே" **அரசியல் விழிப்புணர்ச்சி** ஆகும். அதனை ஏற்படுத்துவதே எனது இப்பேச்சின் பிரதான நோக்கமாகும்.

உலகில் உரிமைகள் உள்ள மனிதராகவே எல்லா மக்களும் வாழ விரும்புகின்றனர். உரிமைகள் என்பது "திருப்திகரமான குடியியல் வாழ்க்கையினையும் அரசியல் வாழ்க்கையினையும் அனுபவிப்பதற்கு மக்களுக்கு இருக்கவேண்டிய அடிப்படை நிபந்தனையே ஆகும்." உலக மக்களுக்கு திருப்திகரமான குடியியல் அரசியல் உரிமைகளும் இலகுவாகக் கிடைக்கவில்லை; ஆகவே கஷ்டப்பட்டு பெற்ற உரிமைகளை காப்பாற்ற வேண்டியது மக்களது கடமையாகும்.

வாக்குரிமை உள்ள பிரஜைகள் ஆட்சி நடவடிக்கைகளுக்காகத் தமது பிரதிநிதிகளைத் தேர்தல் மூலம் தெரிவு செய்கின்றனர். தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தம்மை தெரிவு செய்த மக்களுக்கான பிரதிநிதிகளாக செயற்படுகின்றனர்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல்" எனத் திருக்குறளில் திருவள்ளுவர் கூறியது போன்று - தமது பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்துள்ளனர். இப்பிரதிநிதிகள் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப சேவையாற்ற வேண்டும்; அஃது இவர் ஏன்? அவர்களை மாற்றும் வல்லமை மக்களின் வாக்குப் பலத்திற்கு உண்டு. எனவே நாம் வாக்குரிமையையும் பிரதிநிதித்துவத்தையும் தொடர்ந்தும் காப்பாற்ற வேண்டும்" என்றார்.



இன்றைய காலகட்டத்தை ஒட்டி பேசிய சிறப்பான உரை அவையினரின் கருத்துக்களும் மிகவும் உபயோகமானவையாகவும், சிந்தனைக்குரியவையாகவும் அமைந்தன.

## இலக்கியக்களம்

27.05.2011 இன்றைய இலக்கியக்களம் நிகழ்வில் "பண்பாடு - மரபும் மாற்றமும்" என்னும் பொருளில் இளைப்பாறிய பிரதி அதிபர் திரு.T.இராஜரத்தினம் அவர்கள் உரை நிகழ்த்தினார். கல்விக்குழுச் செயலாளர் திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்கள் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில், பேச்சாளர் கல்வி கற்ற பாடசாலைகள், பல்கலைக்கழகம் என்பன பற்றிய விபரங்களைக் கூறியதோடு, யாழ்ப்பாணத்தில் உள்ள பல கல்வி நிறுவனங்களில் கடமையாற்றிய பின்னர் இளைப்பாறும் வரை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராகப் பணிபுரிந்தார் என்று கூறினார்.

மேலும், இவர் ஒரு சிறந்த பேச்சாளர், பல கட்டுரைகள் எழுதியவர். இரண்டு புத்தகங்களை எழுதி வெளியிட்டவர். பல நிகழ்ச்சிகளை தலைமை தாங்கி நடாத்தியவர். நல்ல ஆளுமை வாய்ந்த மனித நேய மிக்க ஒருவர் என்று கூறி, அவர் உரையாற்றவிருக்கும் தலைப்பு அவரது பேராசான் மதிப்புக்குரிய அமரர் சோ.கிருஷ்ணராஜா அவர்களது நூலை அடிப்படையாகக் கொண்டது என்ற செய்தியையும் தெரிவித்து இன்று அமரர் கிருஷ்ணராஜா அவர்களது நினைவு நாள், நாமும் 2 நிமிடம் அவரது ஆத்மசாந்திக்கு அஞ்சலி செய்வோம் என்று கூற சபையினரும் எழுந்து அஞ்சலி செய்தனர்.

"பண்பாடு என்பது பாரிய சர்ச்சைக்குரிய ஒரு சொல்லாகும். கலாசாரம், நாகரிகம் என்ற வற்றால் வேறுபட்ட சிந்தனைகளும் வாதப்பிரதிவாதங்களும் உண்டு. எமது இனம்தான் மாற்றங்களை விரையில் ஏற்றுக் கொள்ளும் இனம். இதனால் எமது பண்பாடு சிதைவடைந்து வருகிறது" என்ற ஒரு முன்னுரையுடன் பேச்சாளரை பேச அழைத்தார்.

பேச்சாளர் உரையின் ஆரம்பத்தில் "பண்பாடு மரபு மாற்றம் என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயம். எனது ஆசான் சோ.கிருஷ்ணராசா அவர்களது நினைவை வெளிப்படுத்த இந்த தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். இதை அவரது நினைவுச் சொற்பொழிவாகக் கூடக் கொள்ளலாம். பேராசான் பிறப்பு, அவரது படிப்பு என்பன பற்றிக் கூறி 2001 வரை பேராசிரியராகப் பணியாற்றினார் என்று கூறினார். அவர் மொழி ஆற்றல் மிக்கவர், நடுநிலை மனப்பாங்குடையவர்; இடையறாது வாசிப்பவர். கடந்த 3 தசாப்தங்களில் விரல் விட்டு எண்ணக் கூடிய சிந்தனை வாதிகளுள் ஒருவர்"

என்றும் கூறினார். இவரது வாழ்வியலும் சிந்தனைகளும் எம்முன் திறந்த புத்தகமாக உள்ளது. பல நூல்கள் கட்டுரைகள் சமர்ப்பித்து மட்டக்களப்பிலிருந்த போது சைவசித்தாந்தம் பற்றிய பல ஆய்வு செய்த தோடு சைவ சித்தாந்தம் - கொப்பரின் கொள்கைகள் - மார்க்சியம் என்ற 3 முரண்பட்ட சிந்தனைகளை ஒப்பிட்டு வெளியிட்டுள்ளார்.

இன்றைய பேச்சு பண்பாடு சமூகம் என்ற அவரது நூலை மையமாகக் கொண்டது. மேலைத்தேய நாட்டவரின் சிந்தனைகளை எடுகோளாகக் கொண்டுள்ளார். 1950 வரை culture என்ற சொல் கலாசாரம் என்றே குறிக்கப்பட்டுள்ளது. பின்னர் தமிழ்ப் பேரகராதி.வையாபுரிப்பிள்ளை போன்றவர்கள் வெவ்வேறு விளக்கங்களைத் தந்தனர். சால்பு, இயல்பு, நற்குண செய்கை எனக் குறிப்பிட்டுள்ளனர். பறவைகளின் ஓசை, யாழ், இசை என்பவற்றை மையப்படுத்தி பேராசிரியர் பண்பாடு என்பதை திணை எனக் கொள்ளலாம் என்கிறார். வாழ்வியல் முறையில் பண்பாடு பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. பண்பாடு பற்றிய தேடலில் செயற்பாடு, வாழ்வில் செய்யும் தொழில் என்பன அடங்கும். மனித அறிவு - பகுத்துக் கூறல் - தொகுத்துக் கூறும் ஆற்றல் மூன்றும் இருப்பவரை அறிவாளி எனக் கொள்வர்.

அரசியல் விஞ்ஞான நுண்ணறிவு பண்பாட்டை அறிதல், விளங்குதல் அதைக் காவிச் செல்லல் எனக் கூறும் IQ, SQ, CQ மூன்றும் இணையும் போது பண்பாடு சீர் செய்யப்படுகிறது. இவற்றை விளக்க மானிடவியல் ஆய்வு பயன்பட்டது. சுயாதிபத்தியமான பல இனக்குழுக்களை மையமாக வைத்து பல தேடல்களை மேற் கொண்டனர் மேலைத் தேசத்தவர். தமிழர் இதில் இன்னும் போதிய கவனம் செலுத்தவில்லை.

சிந்தனையையும் நடத்தையையும் சமூக ரீதியாக வரையறைப் படுத்துவர். பண்பாட்டை தீர்மானிப்பதில் நிறுவனம், கற்றல், மதங்கள், சமூகம், நடத்தை என்பன முக்கிய இடம் பெறுகின்றன. பண்பாட்டுக் குரிய விளக்கங்களை 8 தலைப்புகளில் 160 பக்கங்களில் விளக்கியுள்ளார்.

சூழல், அரசு, சடங்குகள் என்பனவும் பண்பாட்டை தீர்மானிக் கின்றன. (மனித வாழ்க்கை முழுமையான வாழ்க்கை கோலங்களாகும்) "தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அதற்கொரு குணமுண்டு" இவ்வாறு ஒவ்வொரு இனத்துக்கும் ஒரு பண்பாடுண்டு. சூழலை அசுத்தமாக்குதல் அல்லது தீட்டாக்குதலால் பண்பாடு மாறுபடு கிறது, வேறுபடுகிறது.

மானிடவியல், பண்பாட்டியல், தத்துவ இயல் இவற்றைக் தொட்டு ஆய்வு செய்தால் பல நல்ல கருத்துக்கள் வெளிவர இடமுண்டு. எல்லோரும்



இணைந்து செயற்பாட்டால் நெறிப்படுத்தப்பட்ட ஒரு முடிவுக்கு வரலாம். பண்பாட்டில் மொழிக் கூட்டம், சட்டம், மெய்யியல் என்பன அடங்கும். பண்பாடு என்பது கற்கப்படுவது; அறியப்படுவது; அடுத்த சந்ததிக்கு காவப்படுவது; பின்னர் மாற்றப்படுகிறது. சிலவற்றை முதியவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.மாற்றங்களுக்கு இடம் கொடுக்கலாம்.

பொது நடத்தைகள் கோலங்கள் பண்பாடு என்றும் கூறுவர். மொழி பண்பாட்டின் 2வது கூறு. மக்களின் முழுமையான வாழ்க்கைக் கோலம் பண்பாடு என்பார் ஒரு சமூகவியலாளர்.

பண்பாடு மரபாக இருந்தாலும் மாற்றத்துக்குள்ளானது என்பது தெளிவானது. ஒரு மனிதனின் செயற்பாட்டைக் கொண்டு அவரது பண்பாடு அறியப்படுகிறது. "பண்பாடு என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு வகைப் பின்னல் என்பர்."

பண்பாடு குறித்த சிலகவிதைகளையும் வாசித்துக்காட்டி நீண்டதொரு உரையை நிறைவு செய்தார். சபையோர் இவரது பேச்சை ஒட்டியும் வெட்டியும் கருத்துக் கூறியதோடு நிகழ்வு நிறைவு பெற்றது.

## நூலகம் (சிறுவர் பகுதி)

28.05.2011 **"கதை கதையாம் காரணமாம்"** என்ற நிகழ்வில் செல்வி கலா வடிவேற்பிள்ளை கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்கயான கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

## ஆரோக்கிய வாழ்வுக்கான கலந்துரையாடல்

29.05.2011 வழமையாக மாத இறுதி ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெறும் நிகழ்வுக்கு சங்கப் பொதுச் செயலாளர் திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்கள் தலைமை தாங்கினார். தமிழ் வாழ்த்தினை திரு.சுப்பிரமணியம் பாலசந்திரன் அவர்கள் இசைத்தார். **"உணவும் - அகத்துறிஞ்சல் தொடர்பான நோய்களும்"** என்ற பொருள் பற்றிய விளக்கவுரையை வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியன் அவர்கள் வழங்கினார். மிகவும் முக்கியமான கருத்துக்களை அவர் கூறியதுடன் மனநிறைவாக உண்ணுகிறோம் ஆனால் எமது உணவுப் பழக்க வழக்கம் காரணமாக நாம் நோய் வாய்ப்படக் காரணி யாது?, உணவுக்கால்வாயில் புற்றுநோய் - வாய், தொண்டை, சிறுகுடல், பெருங்குடல், மலவாசல் புற்றுநோய் முதலியன; இவற்றை எப்படி முன் கூட்டியே தடுக்கலாம்? சாதக பாதகத் தன்மைகள்? போன்ற கேள்விகளுக்கு வைத்தியகலாநிதி நச்சினார்க்கினியன் மிக சிறப்பான முறையில் விளக்கம் அளித்தார்.

அவரைத் தொடந்து வைத்திய கலாநிதி சி.அனுஷ்யந்தன் அவர்கள் அகத்துறிஞ்சல் என்றால் என்ன?, வயிற்றோட்டம், வயிற்றுவலி சம்பவிக்கக் காரணம் - யாது செய்யலாம்? போன்ற கேள்விகளுக்கு நல்ல பல கருத்துக்களை வழங்கினார். விளக்கப் படங்களையும் அவையோருக்கு காண்பித்து ஒரு உபயோகமான உரையை வழங்கினார்.

அவரைத் தொடர்ந்து சிலவேளைகளில் ஓங்காளம். சத்தி ஏற்படக் காரணியாது?, ஏவறை, வயிறுபொருமல், கடமுடசத்தம், நெஞ்செரிப்பு, அடிக்கடி வாயு வெளியேறல் - காரணம் / யாது செய்யலாம்?, குடல் எரிவு, குடற்புண் ஏற்படக் காரணி யாது?, தின உணவில் இலைக்கீரை சேர்ப்பதன் அவசியம் யாது?, காய்கறிகள் அருந்துவதன் சிறப்பு அம்சம் யாது?, விரைவுணவுகள், உணவுக்கால்வாயில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் யாது?, காய்கறி, இலைக்கீரை வகை தினம் சேர்த்து உண்ணத் தயக்கம் - யாது செய்யலாம்?, மூச்சுப்பயிற்சி மூலம் மனஅமைதி கிடைக்குமா? நோயைத் தவிர்க்கலாமா? போன்ற கேள்விகளுக்கு வைத்தியகலாநிதிகள் திருமதி சிவானந்தி இரகுபரன், திருமதி விக்னவேணி செல்வநாதன் ஆகியோர் சிறப்பான பல நன்மை பயக்கக் கூடிய கருத்துக்களை விளக்கமாக எடுத்துரைத்தார்கள். மண்டபம் நிறைந்த ஜனத்திரளுடன் ஒரு பயன்தரத்தக்க கருத்தரங்காக இது அமைந்து மக்களின் வரவேற்பைப் பெற்றது.

"சமூக அமைப்பு மற்றும் அரசியல் பற்றிய கருத்துக்களைப் பெருக விடுவதற்கு முன் அறிவுக் கருத்துக்களை பிரளய வெள்ளமெனப் பெருக்குங்கள். நமது கவனத்துக்குரிய முதல் வேலை இதுதான்; நமது மதங்களிலும் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் சிறைபட்டுக் கிடக்கின்ற அற்புதப் பேருண்மைகளை நூல்களிலிருந்து வெளியே கொண்டுவர வேண்டும். காடுகளிலிருந்து வெளிப்படுத்த வேண்டும். விடுவித்த பின் நாடெங்கும் அவற்றைப் பரப்பவேண்டும். இந்த உண்மை நாடு முழுவதும் தீயெனப் பாய்ந்து பரவ வேண்டும்."

*சுவாமி விவேகானந்தர்*



நாம் துன்பப்படுவதற்கு நாமேதான் காரணம்; வேறு யாரும் அல்ல. நாமே விளைவுகள்; நாமே காரணங்கள். எனவே நாம் சுதந்திரர்கள். நான் துன்பப்பட்டால் விரும்பினால் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது. நான் தூய்மையற்றவனாக இருந்தால் அதுவும் நான் செய்து கொண்டது தான். இதுவே, நான் விரும்பினால் தூயவனாக இருக்க முடியும் என்பதையும் காட்டுகிறது. மனித சங்கல்பம் எல்லாச் சூழ்நிலைகளையும் கடந்து நிற்கிறத. அந்த வலிமையான, உறுதியான எல்லையற்ற சங்கல்பத்திற்கும் சுதந்திரத்திற்கும் முன்னால் எல்லா ஆற்றல்களும், இயற்கையின் ஆற்றல்கள் கூட கட்டாயம் தலை வணங்கியே தீர வேண்டும். ஒடுங்கியாக வேண்டும், சேவகர்களாக வேண்டும்.

நமது தகுதிக்கு ஏற்றதையே நாம் பெறுகிறோம். உலகம் கெட்டது, நாம் நல்லவர்கள் என்று சொன்னால் அது பொய். அப்படி ஒரு போதும் இருக்க முடியாது. அது நமக்கே நாம் சொல்லிக் கொள்ளும் ஒரு பெரும் பொய்.

கற்றுக் கொள்ள வேண்டிய முதற்பாடம் இதுவே. வெளியிலுள்ள எதையும் சபிக்காமலும், வெளியிலுள்ள ஒருவர் மீதும் பழி சுமத்தாமலும் இருக்கத் தீர்மானியுங்கள். மனிதனாக இருங்கள். எழுந்து நில்லுங்கள். பழியை உங்கள் மீதே சுமத்திக் கொள்ளுங்கள். எப்போதும் அதுவே உண்மை என்பதை அப்போது காண்பீர்கள். உங்களையே வசப்படுத்திக் கொள்ளுங்கள்.

*சுவாமி விவேகானந்தர்*

## நன்றியுடையோம்

சமூகந்தர முடியாத நாட்களில் சங்க நிகழ்வுகள் பற்றி செய்திகளைச் சேகரித்து தொகுப்புப் பணிக்கு உதவிய பொதுச் செயலாளர் திரு.ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன், ஆட்சிக்குழு உறுப்பினர் கதிரவேலு மகாதேவா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

தொகுப்பாளர்:- கந்தசாமி மகாதேவா - உறுப்பாண்மைக்குழுச் செயலாளர்

வடிவமைப்பு:- திருமதி. கு. சத்தியஜோதி

கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல.07, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.

## தமிழ்க் கூடம்

காலைக் கதிரவனின் கதிர்கள் பளபளக்கும்
மேலை மாடிதனில் மெள்ளக் குயிலொலிக்கும்
வேலை தனிலிருந்து வீசும் காற்றணைக்கும்
மூலை முடுக்கெல்லாம் முத்தமிழ் கலந்தொலிக்கும்

சங்கம் வளர்த்திட்ட சான்றோர் வழிவந்து
பொங்கு(ம்) தமிழ்வளர் பொதுப்பணி ஏற்றிட்ட
தங்கத் தமிழர்நாம் தலைநகர் தனில்வந்து
தங்க அறையமைத்து தருகின்றோம் நாமுமக்கு

எங்கும் புகழ்சேர் எழிலார் பணியதனை
இங்கும் செய்திடவே இறையருளும் கூடிற்று
உங்கள் தயவுடனே உயர்ந்தவிம் மாபணிகள்
என்றும் தொடர்ந்திடவே வாழ்த்தி யருள்வீரே

கந்தசாமி மகாதேவா